27/6

# PEMBUKAAN RASMI
# BANGUNAN SEKOLAH BARU & DEWAN
# SJK (T) VIVEKANANDA
# KUALA LUMPUR



## 9 OKTOBER 2002

# திறப்பு விழா

## தேசிய மாதிரி விவேகானந்தா தமிழ்ப்பள்ளி
## 4, ஜாலான் விவேகானந்தா
## 50470 கோலாலம்பூர்


# நடமாடும் தெய்வங்களே, போற்றி ! போற்றி!

எந்த மனித இனத்தைச் சார்ந்தவராயிருந்தாலும் சரி;
எந்த நாட்டைச் சார்ந்தவராயிருந்தாலும் சரி;
எந்தக் கொள்கையைக் கொண்டவராயிருந்தாலும் சரி;
இவர்களுடைய வரலாறுகளையும்
ஞான நன்மொழிகளையும்
பெற்ற காரணத்தால்,
பண்டைய தீர்க்கதரிசிகளைப் போற்றி வணங்குவோமாக.
தெய்வத் தன்மை வாழ்ந்த ஞானிகளே,
போற்றி! போற்றி!

எந்தக் குலத்தில் பிறந்தால் என்ன?
எந்த வருணத்தைச் சார்ந்தால் என்ன?
எந்த இனத்தில் தோன்றினால் என்ன?
மனித இனம் முன்னேற முயலும் சான்றோர்களே,
போற்றி! போற்றி!

நம் பின் வருபவர்களுக்குத் தன்னலங்கருதாது
நற்செயலாற்றும் வருங்காலத்து
நடமாடும் தெய்வங்களே,
போற்றி ! போற்றி!

- சுவாமி விவேகானந்தர்




**MENTERI KERJA RAYA, MALAYSIA**
**MINISTER OF WORKS, MALAYSIA**

**KEMENTERIAN KERJA RAYA, MALAYSIA,**
TINGKAT 5, BLOK 'A', KOMPLEKS KERJA RAYA,
JALAN SULTAN SALAHUDDIN,
50580 KUALA LUMPUR.

TEL : 03 - 4692121
FAX : 03 - 4691818
03 - 4696361


## மலேசிய இந்தியர் காங்கிரசின் தேசியத் தலைவரும், மலேசிய பொதுப்பணி அமைச்சரும் விவேகானந்தா ஆசிரம புரவலருமான மாண்புமிகு டத்தோஸ்ரீ ச.சாமிவேலு அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி.

பிரிக்பீல்ட்ஸ், ஜாலான் விவேகானந்தாவிலுள்ள, விவேகானந்தா தமிழ்ப்பள்ளி 1914ஆம் ஆண்டு முதல் மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது. இவ்வட்டாரத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் தமிழ்த் தாகத்தை தீர்க்கும் வகையில் மாணவர்களுக்கு கல்வித் தொண்டு செய்து வருகிறது என்பதை அறிந்து பாராட்டுகின்றேன்.

தாய் மொழி வளர்ந்தால்தான் அந்த இனத்தின் பண்பாடுகளையும், கலாச்சாரங்களையும் பேணிப் பாதுகாக்க முடியும். இதைக் கருத்தில் கொண்டு இப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியப் பெருந்தகைகள் தமிழ் உணர்வோடு, மாணவர்களின் கல்வியிலும், வளர்ச்சியிலும் அக்கரை செலுத்தி வருவதால் பள்ளியின் கல்வித்தரம் உயர்ந்து வருவதை நான் அறிவேன். இதனால் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதைக் கருத்திற் கொண்டு, விவேகானந்தா ஆசிரம நிர்வாகம் புதிய நவீன வசதிகளைக் கொண்ட நான்கு மாடிக் கட்டிடம் ஒன்றையும், பல்நோக்கு மண்டபத்தையும் கட்டி சாதனைப் படைத்துள்ளது.

விவேகானந்தா தமிழ்ப்பள்ளிகளுக்கு 35 ஆண்டுகளாக அயராது அர்ப்பண உணர்வோடு தொண்டு செய்த கலை வளர்க்கும் நம்பி அமரர் திரு. சி. கந்தையா அவர்களின் பெயரை இப்புதிய மண்டபத்திற்கு வைத்துள்ளது போற்றத்தக்கதாகும்.

நமது மாணவர்கள் பல்வேறு தீயச் சக்திகளில் அறிந்தோ, அறியாமலோ ஈடுபட்டு வருவது நமக்கெல்லாம் கவலை அளிக்கின்றது. பள்ளி நிர்வாகமும், பெற்றோர் ஆசிரியர் சங்கமும், முன்னாள் மாணவர் சங்கமும் இணைந்து இவ்விசயத்தில் அதிக கவனம் செலுத்தி, நமது எதிர்காலச் சந்ததியினரை நல்வழிப்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வது அவசியம் என்பதால், நமது பண்பாட்டுக் கூறுகளை அவர்கள் புரிந்துக் கொள்ளும் வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இவ்வேளையில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

எதிர்வரும் காலங்களில் பள்ளி மேலும் சிறப்பாகச் செயல்பட்டு, பல நல்ல இளைய தலைமுறையை உருவாக்கி புகழ் முத்திரைப் பதிக்க வேண்டும் என்று பள்ளி ஆசிரிய பெருந்தகையினரை மனதாரக் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி.

**டத்தோஸ்ரீ ச. சாமிவேலு**

"I accept all the religions that were in the past, and worship them all. I worship God with everyone of them, in whatever form they worship Him. I shall go to the mosque of the Muslim; I shall enter the Christian church and kneel before the crucifix. I shall enter the Buddhist temple, where I shall take refuge in Buddha and his law. I shall go into the forest and sit down in meditation with Hindu, who is trying to see the Light which enlightens the hearts of everyone. Not only shall I do all these things, but I shall keep my heart open for all that may come in the future."

......Swami Vivekananda

விவேகானந்தா ஆசிரமத் தலைவரும்
பள்ளி நிர்வாகக் குழுத் தலைவருமான

# டத்தோ டாக்டர் கந்தையா அம்பிகைபாகன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

*இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்*
*இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்*
*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆல யம்பதி னாயிரம் நாட்டல்*
*பின்ன ருள்ள தருமங்கள் யாவும்*
*பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்*
*அன்ன யாவினும் புண்ணியங் கோடி*
*ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்*

எனும் பாரதியாரின் வாக்கின்படி ஒரு சமுதாயத்தின் உயர்வுக்கு கல்வியே முக்கியமென அறிந்த விவேகானந்தா ஆசிரமத்தினர் 1914ஆம் ஆண்டு இந்த விவேகானந்தா தமிழ்ப்பள்ளியை உருவாக்கினர்.

1952களில் மலேசியாவிலேயே சிறந்த வசதிகளையும் பெரிய மண்டபத்தையும் கொண்ட தமிழ்ப் பள்ளியாக இப்பள்ளியை அன்றைய ஆசிரம நிர்வாகத்தினர் உருவாக்கிப் பெருமை சேர்த்தனர்.

அச்சான்றோர்களின் வழியில் 50 ஆண்டுகளுக்குப் பிறகு சிறந்த கணினி மையம், விசாலமான நூலகத்தைக் கொண்ட கற்றல் மையம், ஆசிரியர் அறை மற்றும் வகுப்பறைகளைக் கொண்ட நான்கு மாடிக் கட்டிடத்தையும், சிறந்த ஒலி, ஒளி வசதிகளைக் கொண்ட குளிர்சாதன வசதியுடைய பெரிய மண்டபத்தையும் விவேகானந்தா ஆசிரம நிர்வாகம் அமைத்துள்ளது. 2000ஆம் ஆண்டுகளில் மலேசியாவிலேயே சிறந்த வசதிகளைக் கொண்ட தமிழ்ப் பள்ளியாகத் திகழ வேண்டுமென்பது ஆசிரமத்தின் நோக்கம்.

விவேகானந்தா தமிழ்ப்பள்ளி, தமிழ்க்கல்வியுடன் கலாச்சாரத்தையும் சமயத்தையும் வளர்க்கும் ஓர் இடமாக விளங்கி வந்துள்ளது. தற்சமயம் சிறந்த நவீன மண்டபத்தைக் கொண்ட இப்பள்ளிச் சூழல் நம் தமிழ்க் குழந்தைகளின் சமய கலாச்சார வளர்ச்சிக்குப் பெருந்துணை புரியும் என்று நம்புகிறோம்.

பள்ளியின் கல்வித்தரம் சென்ற சில ஆண்டுகளில் உயர்ந்து வருவது யாவரும் அறிந்த ஒன்றே. சென்ற ஆண்டு கோலாலம்பூர் தமிழ்ப்பள்ளிகளிடையே இப்பள்ளி UPSR தேர்வில் முதன்மை பெற்று விளங்கியது பெருமைக்குரிய விசயமாகும்.

தற்சமயம் பள்ளியில் கற்றல் கற்பித்தல் நன்கு நடைபெற நல்ல வசதிகளைப் பள்ளிக் கட்டடம் பெற்றுத் தந்துள்ளது. இது மாணவர்களின் கல்வித்தரத்தை மேலும் உயர்த்தும்; மலேசியாவிலேயே ஓர் எடுத்துக்காட்டுப் பள்ளியாக விளங்கும் என்பது எங்களின் எதிர்பார்ப்பாகும். பள்ளி இதுபோல அமைந்துள்ளதற்கு உறுதுணையாக இருந்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறோம். பள்ளி மேலும் சாதனைகளைப் படைக்க இறைவன் அருள்புரிவாராக.

நன்றி.

**டத்தோ டாக்டர் கந்தையா அம்பிகைபாகன்**

# தலைமையாசிரியர் உரை

1914ல் தோன்றிய கோலாலம்பூர் விவேகானந்தா தமிழ்ப்பள்ளி சிறுகச் சிறுக உருவெடுத்து எதிர்வரும் 9-10-2002 அன்று திறப்புவிழா காணவிருக்கும் இப்பள்ளி, அழகான நான்கு மாடி கட்டடத்தோடும் நவீன மண்டபத்தோடும் இப்பிரிக்பீல்ட்ஸ் வட்டாரத்தில் தலைநிமிர்ந்து நிற்பதைப் பார்க்கும்போது மனதில் சொல்லவொன்னா மகிழ்ச்சி பொங்கி எழும்புகிறது. ஆசிரியர்களின் முகத்திலும் மாணவர்களின் முகத்திலும் ஓடும் இன்ப ரேகையை நன்கு அறிய முடிகிறது.

புதிய கட்டடம் வந்ததால் விசாலமான கணினி அறை, நல்ல காற்றோட்டமான வகுப்பறைகள், ஆசிரியர் அறை மற்றும் பெரிய போதனைக் களஞ்சிய அறையும் கிடைத்தன. அதுமட்டுமல்லாமல், இதன்மூலம் விவேகானந்தர் கட்டடத்தில் (பழைய கட்டடம்) உள்ள அறைகள் வாழ்வியல் அறையாகவும், அறிவியல் கூடமாகவும், விசாலமான பாலர் வகுப்பாகவும் மற்றும் ஆசிரியர் கூட்டம் நடத்த ஏதுவாக ஓர் அறையும் கிடைக்க வழிவகுத்தன.

இத்தனை வசதிகளையும் நமக்களித்த பெருமை விவேகானந்தா ஆசிரமத்தையும் அதன் தலைவர் டத்தோ டாக்டர் கந்தையா அம்பிகைபாகன் அவர்களையுமே சாரும். ஆயிரம் கோயில்கள் கட்டுவது ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்குச் சமமாகும். விவேகானந்தா ஆசிரமத்தினர் இப்பள்ளிக்கூடத்தைக் கட்டி ஆயிரம் கோயில்கள் கட்டியதற்கான புண்ணியத்தைச் சேர்த்துக் கொண்டனர்.

லேடி டெம்ப்ளர், துன் வீ.தி. சம்பந்தன், சுதந்திர தந்தை துங்கு அப்துல் ரஹ்மான், முன்னாள் பேரரசர், கர்மவீரர் காமராசர், பழம்பெரும் நடிகர் சிவாஜி கணேசன் ஆகிய புகழ்வாய்ந்தவர்களின் காலடிச் சுவடுகள் இப்பள்ளியில் பதிந்துள்ளன. சரித்திரம் வாய்ந்த இப்பள்ளியில் தலைமையாசிரியராகப் பணிபுரிவதை நினைக்கும் போது பெருமையாக உள்ளது.

ஆகஸ்ட் மாதம் 22-ஆம் நாள் இப்பள்ளியின் நினைவு நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு வருடமும் இப்பொன்னாள் கொண்டாடப்படும். மற்றவர்கள் இப்பள்ளியின் புதிய கட்டடத்தைப் பார்த்து புகழும் போது மலேசியாவில் உள்ள அனைத்துத் தமிழ்ப்பள்ளிகளும் இம்மாதிரி நவீன கட்டட வசதிகளைப் பெற்று மற்ற பள்ளிகளுக்கு நிகராக தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற அவா எழும்புகிறது.

தொடர்ந்து பல சாதனைகள் புரிய விவேகானந்தா ஆசிரமத்தினரால் உருவாக்கப்பட்ட இப்பள்ளி அம்மகானின் பெயர் விளங்க பீடுநடை போடும்.

அன்புடன்,

**திருமதி பா. வளர்மதி**
**தலைமையாசிரியர்**
**விவேகானந்தா தமிழ்ப்பள்ளி,**
**பிரிக்பீல்ட்ஸ்.**

# தேசிய மாதிரி விவேகானந்தா தமிழ்ப்பள்ளி
# பெற்றோர் ஆசிரியர் சங்க
# தலைவர் உரை

அன்புக்கும் மரியாதைக்கும் மாண்புக்கும் உரிய அனைவருக்கும் வணக்கம்.

தேசிய மாதிரி விவேகானந்தா தமிழ்ப்பள்ளியின் புதிய கட்டிடத் திறப்பு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

எதிர்வரும் 2004-ஆம் ஆண்டு வெகு சிறப்பாக 100-வது ஆண்டு விழாவை கொண்டாடவிருக்கும் ஆசிரமம், தமிழ்ப்பள்ளி தோற்றுவிக்கப்பட்ட கடந்த 88 ஆண்டுகளில் பல கல்வியாளர்களையும், நிபுணர்களையும், தொழில் அதிபர்களையும், மருத்துவர்களையும், அறிஞர்களையும் உருவாக்கியுள்ளது.

கோலாலம்பூர் விவேகானந்தா தமிழ்ப்பள்ளியின் முன்னாள் மாணவரும் இந்நாள் விவேகானந்தா ஆசிரம தலைவருமான டத்தோ டாக்டர் அம்பிகைபாகன் அவர்களின் பெருமுயற்சியால் புதிய நான்கு மாடி கட்டிடமும் நவீன பொது மண்டபமும் கட்டி முடிக்கப்பட்டு இப்பொழுது நமது பிள்ளைகள் அரசாங்க பள்ளிக்கு நிகராக கட்டப்பட்ட புதிய பள்ளியில் மகிழ்ச்சியாக கல்வி கற்று வருகிறார்கள்.


நமது நாட்டில் தமிழை முழுமையாக கற்க வேண்டிய இடம் தமிழ்ப்பள்ளி. நமது தமிழ்ப் பள்ளியில் படிகின்ற அனைத்து மாணாக்கர்களும் முறையான கல்வி கற்று சிறப்பான தேர்ச்சி பெற வேண்டுமென்பதற்காக தலைமையாசிரியர் திருமதி பா. வளர்மதி செல்வம், துணைத் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் அனைவரும், விவேகானந்தா ஆசிரமம், முன்னாள் மாணவர் சங்கம், கல்வி மேம்பாட்டுக் குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொறுப்பாளர்களின் முழு ஒத்துழைப்போடு கல்வியின் தரம் உயர்வடைய பணியாற்றி வருகிறார்கள்.

விவேகானந்தா ஆசிரமம், பள்ளி வாரியம், செய்து வருகின்ற அனைத்து காரியங்களுக்கும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் என்றும் துணையாக இருக்கும். விவேகானந்தா தமிழ்ப்பள்ளி கட்டிடத் திறப்பு விழா மிகச்சிறப்பாக நடைபெற மீண்டும் எனது மனமார்ந்த வாழ்த்தையும், பாராட்டுதலையும் வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ப்பணி!
தமிழரை எண்ணுவோன் தரணியில் பொன்னாவான்!

அன்புடன்,

**சா. ஜெயராமன்**
பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர்
விவேகானந்தா தமிழ்ப்பள்ளி, பிரிக்பீல்ட்ஸ்.



விவேகானந்தா ஆசிரமத் தொண்டர்

**திரு. சி. கந்தையா அவர்கள்**

# சீருரை

**உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன்.**

எழிலார் ஈழத்திருநாட்டின் ஓங்கு புகழ் யாழ்ப்பாணத்துத் திருநகர் சார்ந்த சான்றோர் வாழும் நற்பதி கோண்டாவில், ஆங்கு ஈந்து இசைபட வாழ்ந்த வேளாண் மரபு சின்னப்பு - ஆச்சிமுத்து தம்பதியாரின் அருமருந்தன்ன மைந்தர் நம் அருள்நெறிச் செல்வர், ஆன்மீகச் செம்மல், இயலிசைத் தமிழ் வித்தகர், கலைவளர் நம்பி, கருமயோகி எனப் பின்னாளில் சான்றோரால் புகழாரம் சூட்டப்பெற்ற அமரர் கந்தையா சின்னப்பு அவர்கள், 13.3.1911இல் தோன்றினார்.

ஆங்கு மாண்புறு மாமன் பண்டித சிகாமணி இளையதம்பி அவர்களிடம் தேனுறு செந்தமிழ் இலக்கிய, இலக்கண, சமயக் கல்வியொடும், வியனுறு ஆங்கிலமும் கசடறக் கற்றுத் தெளிந்தார். தம் பதினெட்டாம் அகவையில், நம் மலையகம் புகுந்து அரசினர் சேவையில் மருத்துவ, சுங்கத் துறைகளில் அரும்பணி ஆற்றினார்.

மேதகு அருணாசலம் - நாகம்மா இணையரின் அருந்தவச் செல்வி தையல்நாயகியைக் கடிமணம் புரிந்து மங்களம் எனும் மனைமாட்சிக்கு நன்கலமாகச் சிவநெறிச் செல்வி திரிபுரதேவி, அருள் நிறை செல்வன் அம்பிகைபாகன், கண்ணியம் மிகு கௌரிபாகன் எனும் மும்மணிகளான நன்மக்கள் பேறு பெற்றார்.

தம்மினும் தம்மக்கள் அறிவுடையாதல் தந்தைக்குப் பெருமை என உழைத்துத் தம் கண்ணான உத்தம புத்திரி இயலிசைச் செல்வியைத் தமிழன்னைக்கே காணிக்கையாக்கிவிட்டார். அவர் சிவனொடு கலந்துவிட்டார். நடுவின் மகனை மருத்துவத்துறையில் மாண்புறச் செய்து அரசரும் போற்றும் பெருஞ்சிறப்புக்கு வழிவகுத்தார். இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் வள்ளுவன் கூற்றுக்கு அம்மகன் எடுத்துக் காட்டாய் இலங்கச் செய்தார்.

கனிட்ட புத்திரன் வணிகத்துறையில் நிறைவுறக் கற்று வளம் பெற வாழ வகை செய்தார்.

அமரர் கந்தையா சின்னப்பு அவர்களின் தொண்டுணர்வு அவர்தம் கருவிலேயே உருவானவை.

அரசு பணியாற்றிய காலையிலும் ஓய்வு பெற்ற வேளையிலும் ஏன், தம் வாழ்வின் இறுதிக் கட்டத்திலும் கூட, "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் அப்பரின் வாக்கே அவர்களின் வாழ்க்கை நெறியாக அமைந்தது.

கருமயோகி கந்தையா சின்னப்பு ஆற்றிய திருத்தொண்டுகள் பல; நினைவில் நிற்பன சில; அவை,

கோலாலம்பூர் விவேகாநந்தா ஆசிரமம், நாட்டின் பழம்பெரும் பள்ளிகளில் ஒன்றான பிரிக்பீல்ட்ஸ் விவேகாநந்தா பள்ளி, இன்று நாட்டின் மிகப் பெரிய தமிழ்ப் பள்ளியான பெட்டாலிங் விவேகாநந்தா தமிழ்ப் பள்ளி, மூடப்படவிருந்த செந்தூல் தம்புசாமி பள்ளியை மீட்டுப் புதுத் தோற்றத்தோடு கட்டடம் எழுப்புதல், நாட்டின் ஒரே உயர்நிலைத் தமிழ்ப்பள்ளியான விவேகாநந்தா இடைநிலைப்பள்ளி (அரசு கொள்கைப்படி பின் மாற்றமடைந்தது), சங்கீத அபிவிருத்திச் சபா, மலாயாத் தமிழ் பண்ணை, மலாயா சைவ சித்தாந்த சங்கம், சிலாங்கூர் இலங்கைத் தமிழர் சங்கம், சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம், தேசிய கல்வி வளர்ப்பு நிறுவனம், முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, ஈழத்துத் திருக்கேதீஸ்வரர் ஆலயத் திருப்பணி சபை ஆகியவற்றில் மிகப் பொறுப்பான பதவிகள்.

என்றும் தம் நலம் பேணாது இறுதிவரை ஆற்றிய அருந் தொண்டுகளுக்காக மலேசியப் பெருமக்கள் அவரைக் 'காந்தி கந்தையா' என்று போற்றினர்; நம் பேரரசர் பொற்பதக்கம் வழங்கிச் சிறப்பித்தார். 14-7-1970 அன்று நல்லார் எல்லாரும் ஏங்க, சிவனடி சேர்ந்தார்.

இன்று நாம், அப்பெருமகனாரின் நினைவாக அவர்தம் அருஞ்சேவைகளை அறிந்த ஒவ்வொருவரின் மனமார்ந்த வேண்டுகோளுக்கு இணங்கிப் புகழ் விரும்பா அப்பெருமானின் திருநாமத்தை இம்மண்டபத்துக்கு, பொன் வைக்கும் இடத்தில் ஒரு பூ வைப்பது போல 'கந்தையா மண்டபம்' எனப் பெயர் சூட்டி நமக்கு நாமே பெருமை சேர்த்துக் கொள்கிறோம்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும் (வள்ளுவன்)**

# Sejarah S.J.K. (T) Vivekananda

Vivekananda Ashrama telah ditubuhkan pada tahun 1904. Se-dekad selepas itu, demi memupuk sebuah komuniti yang progresif, Pengurusan Vivekananda Ashrama mula menumpukan perhatian mereka terhadap agama dan pendidikan.

Ashrama mula menyedari keperluan pendidikan, terutamanya pendidikan Tamil di Brickfields, Kuala Lumpur, seiring dengan peningkatan penduduk Tamil di kawasan ini. Pada masa yang sama, kepentingan pendidikan asas dalam bahasa ibunda, sebelum meneruskan pendidikan menengah dalam bahasa Inggeris, juga disedari oleh Ashrama. Justeru itu, Pengurusan Vivekananda Ashrama telah menubuhkan sebuah sekolah Tamil pada 22 Ogos 1914, dengan 14 orang murid. Pada awalnya, ia didirikan sebagai sebuah sekolah pondok.

Oleh kerana kekurangan tempat dan kemudahan, Bangunan 'Paramahamsa' dibina pada tahun 1921. Kewangan bagi projek ini disediakan melalui pelbagai aktiviti amal mengumpul derma. Projek ini dilancarkan oleh Swami Abehanandha pada 8 Oktober 1921.

Bangunan 'Paramahamsa' tidak dapat menampung keperluan murid-murid untuk lama. Keinginan penduduk Tamil di persekitaran Brickfields, untuk memberikan anak-anak mereka pendidikan asas dalam bahasa Tamil, telah memerlukan sebuah sekolah yang lebih besar. Pada tahun 1937, Bangunan 'Vipulananda' dibina. Ini diikuti oleh Dewan 'Appudurai' dan Bangunan Vivekananda pada tahun 1952.

19 Julai 1952 adalah tarikh yang amat penting dan bermakna dalam sejarah S.J.K. (T) Vivekananda. DYMM Seri Paduka Baginda Yang Di-Pertuan Agong Al-Marhum Sultan Salahuddin Abdul Aziz Shah Al-Haj (Yang Di-Pertuan Agong ke sebelas), selaku Raja Muda Selangor pada masa itu, telah merasmikan pembukaan Bangunan Vivekananda.

Dalam tahun 1957, Pengurusan Ashrama telah memutuskan untuk mengadakan sebuah sekolah tadika. Bagi mencapai matlamat ini, sebuah lagi bangunan telah dibina, pada tahun yang sama.

## Sekolah Menengah Tamil Yang Pertama di Malaysia (Malaya)

Keinginan Vivekananda Ashrama untuk mendirikan sebuah Sekolah Menengah Tamil, supaya murid-murid Sekolah Rendah Tamil dapat meneruskan pendidikan dalam bahasa ibunda, dicapai selepas Merdeka. Pada 13 September 1958, Sekolah Menengah (Tamil) Vivekananda telah dibuka secara rasminya oleh Bapa Malaysia, Tunku Abdul Rahman Putra Al-Haj. Beberapa tahun selepas itu, bahasa pengantar sekolah tersebut ditukar kepada Bahasa Malaysia, sejajar dengan Dasar Pendidikan Nasional.

## Merdeka

Malaya mencapai Merdeka, dibawah pimpinan Bapa Malaysia, Tunku Abdul Rahman Putra Al-Haj. Murid-murid S.J.K. (T) Vivekananda telah mengambil bahagian dalam upacara deklarasi Merdeka, pada 31 Ogos 1957. Selepas itu, pada tahun yang sama, sekolah telah mengadakan sebuah ekspo sempena Merdeka. Dalam majlis ini, Menteri Buruh pada masa itu, Tun V. T. Sambanthan telah merasmikan pembukaan potret Bapa Malaysia, Tunku Abdul Rahman Putra Al-Haj, di Dewan Appudurai.

## Bangunan Baru S.J.K. (T) Vivekananda

Seiring dengan perubahan dan keperluan semasa, dengan kos sebanyak RM 2.5 juta, Vivekananda Ashrama telah menyempurnakan pembinaan sebuah bangunan 4 tingkat dan sebuah dewan yang lengkap dengan segala kemudahan moden. Bangunan ini menyediakan bilik-bilik darjah yang moden, pusat komputer, perpustakaan dan bilik guru. Segala kemudahan ini pasti akan memberi suasana pengajaran dan pembelajaran yang berkesan.

Kebaktian Vivekananda Ashrama, dibawah pimpinan Dato' Dr. K. Ampikaipakan, dalam menyediakan kemudahan pendidikan yang unggul bagi masyarakat Tamil di negara ini, seharusnya tidak dilupakan.

# வரலாற்றுச் சிறப்புமிக்க விவேகானந்தா தமிழ்ப்பள்ளியின் வரலாறு

"அன்னசத்திரம் ஆயிரம் அமைப்பினும், ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் ந சிறந்தனவே" என்ற பொன்மொழியைப் பெருநோக்காகக் கொண்டு, விவேகானந்த ஆசிரமம் தோற்றுவிக்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குப் பின்னர், விவேகானந்தா ஆசிர நிர்வாக குழுவினர், தங்கள் கவனத்தைச் சமயம், கல்வி ஆகியவற்றில் செலுத்த முனைந்தனர்.

கோலாலம்பூர் பிரிக்பீட்ல்ஸ் வட்டாரத்தில் தமிழ்க் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும் கல்விக்கு முக்கியத்துவம் ஏற்பட்டதாலும், ஆசிரம நிர்வாக இவ்வட்டாரத்தில் வாழும் குடும்பங்களின் பிள்ளைகளின் தமிழ்க்கல்வியின் அவசியத்தை உணர்ந்தது. அதே வேளையில், ஆங்கில இடைநிலைக் கல்வியைத் தொடருவதற்கு முன்ன அடிப்படைக் கல்வியைத் தாய்மொழியில் கற்பதன் அவசியத்தையும் உணர்ந்தது. இத தொடர்பாக விவேகானந்தா ஆசிரம நிர்வாக சபையினர் ஒரு தென்னங்கீற்று கொட்டகையில் ஒரு தமிழ்ப்பள்ளியை 22-8-1914-ஆம் நாள் 14 மாணவர்களுட அமைத்தனர்.

மாணவர்கள் எண்ணிக்கைப் பெருகியதால் இடப்பற்றாக்குறை ஏற்பட்டது நன்கொடைகள் வசூலித்தும் கலை நிகழ்ச்சிகளை நடத்தி நிதி சேகரித்தும் 1921-ஆம் ஆண் அக்டோபர் திங்கள் பரமஹம்சர் கட்டடத்தை அமைத்தனர்.

8-10-1921-ஆம் ஆண்டு சுவாமி அபெஹானந்தா அவர்கள் இக்கூட்டத்திற்கு அடிக்க நாட்டினர். தமிழ் ஆர்வமுள்ள தமிழ் மக்களில் அதிகமானோர் தம் குழந்தைகளுக்குத் தமிழ் கல்வி புகட்ட தமிழ்ப் பள்ளிகளை அதிகம் நாடியதால் இடப்பற்றாக்குறை ஏற்பட்டது. எனவே 1937-ஆம் ஆண்டு விபுலானந்தர் கட்டடத்தையும், 1952-ஆம் ஆண்டு அப்புத்துரை மண்டபத்துடன் கூடிய விவேகானந்தர் கட்டடத்தையும் அமைத்தனர்.

1952-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19-ஆம் நாள் கோலாலம்பூர் விவேகானந்த தமிழ்ப்பள்ளியின் பொன்னான நாள். மாட்சிமை தங்கிய முன்னாள் பேரரசர் சுல்தான் அப்து அஜிஸ் இசாமுடின் ஆலம் ஷா அவர்கள் சிலாங்கூர் இராஜா முடாவாக இருந்த அக்காலத்தி விவேகானந்தர் கட்டடத்தைத் திறந்து வைத்தார். இந்திய கலாச்சார முறையில் மேள தா நாதஸ்வரம் இசைக்க வானத்திலிருந்து வானூர்தி பூமாரி பொழிய மக்களி வாழ்த்தொலியுடன் வரவேற்கப்பட்ட மேன்மை தங்கிய இராஜா முடா அவர்கள் கட்டடத்தை அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றினார்கள்.

முதலாம் வகுப்புக்கு வருமுன்பே மாணவர்கள் அடிப்படைக் கல்வி பெற இளம் பால வகுப்பு நடத்த பள்ளி நிர்வாகம் விரும்பியது. எனவே, 1957-ஆம் ஆண்டு இளம் பாலர் வகுப் நடத்துவதற்குக் கட்டம் ஒன்றைக் கட்டி, அதில் சிறார்களுக்கு, (கிண்டர் கார்டன்) பால வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

## மலேசியாவில் (மலாயாவில்) முதல் தமிழ் உயர்நிலைப் பள்ளி

தமிழ்ப் பள்ளிகள் 6-ஆம் வகுப்பு அல்லது 7-ஆம் வகுப்பு முடித்த பின் தொடர்ந்து கல்வியைத் தொடர உயர்நிலைப் பள்ளியை உருவாக்க விவேகானந்தா ஆசிரமத்தார் எண்ணினர். சுதந்திரத்திற்குப் பின் 1958-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13-ஆம் நாள் மலாயாக் கூட்டரசு சுதந்திரத் தந்தை மாண்புமிகு துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களால் விவேகானந்தா உயர்நிலைத் தமிழ்ப் பள்ளி திறப்பு விழா கண்டது. அதன்பின் சில ஆண்டுகளுக்குப் பின் மலேசியக் கல்விக் கொள்கைகளுக்கிணங்க அப்பள்ளி மலாய் பயிற்றுமொழியைக் கொண்ட இடைநிலைப் பள்ளியாக மாற்றப்பட்டு தொடர்ந்து நடந்து வருகிறது.

## மெர்தேகா


காலனித்துவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தவர் சுதந்திரத் தந்தை துங்கு அவர்கள். 31-8-1957-ல் நாள் சிறந்த முறையில் சுதந்திர தினம் மெர்தேகா அரங்கில் பிரகடனப் படுத்தப்பட்டது. அந்த அரங்கேற்ற நிகழ்வில் இப்பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு "மெர்தேகா! மெர்தேகா! மெர்தேகா!" என்று முழக்கமிட்டனர். அதன்பின் மெர்தேகா (1957) பொருட்காட்சியும் பள்ளியில் நடைபெற்றது. அந்நிகழ்வில் விவேகானந்தர் கட்டடத்திலுள்ள அப்புத்துரை மண்டபத்தில் சுதந்திரத் தந்தை மாண்புமிகு துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் படத்தை மாண்புமிகு தொழில் அமைச்சர் துன் வீ.தி. சம்பந்தன் அவர்கள் திறந்து வைத்து நிகழ்ச்சியைச் சிறக்க வைத்தார்.

## பள்ளியின் புதிய கட்டடம்


விவேகானந்தா தமிழ்ப் பள்ளியின் உயர்வுக்குப் பாடுபட்ட பெரியவர்கள் பலர். காலத்திற்கு ஏற்ப தற்சமயம் 4 மாடிகளைக் கொண்ட பள்ளிக் கட்டடத்தையும் நவீன வசதிகளைக் கொண்ட சிறந்த மண்டபத்தையும் விவேகானந்தா ஆசிரமம் 25 இலட்சம் வெள்ளி செலவில் கட்டி முடித்துள்ளது. வகுப்பறைகள், கணினி மையம், பெரிய நூலகத்துடன் கூடிய கற்றல் மையம், ஆசிரியர் அறை போன்ற வசதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வசதிகள் எதிர்கால மாணவர்களுக்கு நல்ல கற்கும் சூழலை ஏற்படுத்துவது திண்ணம்.

காலத்தில் அழியாத வசதிகளைப் பெற டத்தோ டாக்டர் கந்தையா அம்பிகைபாகன் தலைமையில் விவேகனந்தா ஆசிரமத்தின் கல்விப்பணியை மலேசிய தமிழ்கூறு நல்லுலகம் என்றும் நினைவுகூரத்தக்கது.


# சரித்திரப் பாதையிலே...




1948ஆம் ஆண்டு கோலாலம்பூர் இந்தியப் பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் முதல் நிலையில் வந்ததால் நடைபெற்ற வெற்றி விழா.



பள்ளிக்கு வருகை தந்த மாட்சிமை தங்கிய ஜெரால் டெம்ளர் அவர்களுடன் விவேகானந்தா ஆசிரம நிர்வாக உறுப்பினர்கள், பள்ளி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள் ஆகியோர்.



1951ஆம் ஆண்டு ஆசிரியர் திரு. மு. நாகலிங்கம் அவர்கள் சரித்திரம் போதிக்கிறார்.




விவேகானந்தா தமிழ்ப்பள்ளி சாரணர் - சாரணியர் இயக்கம் (மலேசியத் தமிழ்ப் பள்ளிகளிடையே இதுவே முதலாவது பதிவு பெற்ற சாரணியர் இயக்கம் ஆகும்.)

1954ஆம் ஆண்டு நடைபெற்ற பெற்றோர் தின விழா






1957ஆம் ஆண்டு பள்ளியில் நடைபெற்ற சுதந்திர விழாவின்போது வருகை புரிந்த மாண்புமிகு அமைச்சர் துன் வீ. தி. சம்பந்தன் அவர்கள்.



1958ஆம் ஆண்டு நாட்டின் முதலாவது தமிழ் இடைநிலைப்பள்ளி திறப்பு விழாவிற்கு வருகை புரிந்த சுதந்திரத் தந்தை மாண்புமிகு துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களுடன் விவேகானந்தா ஆசிரம செயலாளர் திரு. க. சிவப்பிரகாசம், விவேகானந்தா பள்ளிகளின் செயலாளர் திரு. சி. கந்தையா, பள்ளியின் சாரணர் சங்கத் தலைவர் ஆசிரியர் திரு. முத்து அவர்கள்.



<u>1960களில்...</u>
ஆசிரியர் திரு. முத்துலிங்கம் அவர்களின் பிரியாவிடை விருந்து.



முன்னாள் தலைமையாசிரியர் திரு. மு. சுப்பிரமணியத்துடன் மாணவர்கள்



75ஆம் ஆண்டு நிறைவு விழாவின் போது விவேகானந்தா ஆசிரமத் தலைவர் திரு. க. சிவசம்பு அவர்கள் மாண்புமிகு டத்தோஸ்ரீ ச. சாமிவேலு அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்கிறார்.



மாண்புமிகு டத்தோஸ்ரீ ச. சாமிவேலு அவர்கள் 75ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். அருகில் விவேகானந்தா ஆசிரமத் தலைவர் டத்தோ டாக்டர் கந்தையா அம்பிகை பாகன் அவர்கள்.

# S.J.K. (T) VIVEKANANDA – BANGUNAN SEKOLAH BARU DAN DEWAN KANDIAH

Bangunan baru bagi S.J.K. (T) Vivekananda adalah suatu bangunan empat tingka yang boleh memuatkan seramai 300 murid.

Dewan Kandiah di Tingkat Bawah mempunyai kemudahan audio dan visual yan terbaru. Seramai empat ratus dan lima puluh orang boleh mengisi Dewan tersebut Perpustakaan berhawa dingin dan Pusat Sumber juga bertempat di Tingka Bawah ini.

Makmal computer yang penuh lengkap, dan juga bilik kakitangan terletak d Tingkat Pertama. Tingkat Kedua dan Tingkat Ketiga masing-masing mempunya empat bilik darjah.



Bangunan Baru SJK (T) Vivekananda



Dewan Baru Kandiah

## PENGHARGAAN KEPADA ...

- Y.B. Dato' Seri Dr. S. Samy Vellu, Menteri Kerja Raya Malaysia, President MIC dan Penaung Vivekananda Ashrama
- Y. Bhg. Tan Sri K.R. Somasundram, NLFCS
- Y. Bhg. Tan Sri Syed Mokhtar, Al-Bukhari Foundation
- Y. Bhg. Tan Sri S.O.K. Ubaidullah, Ubaidi Foundation
- Y. Bhg. Tan Sri Abu Said Bin Mohd
- Encik Goh Say Tong, ST Goh Architect
- Persatuan Ibubapa dan Guru-guru S.J.K. (T) Vivekananda
- Persatuan Murid-murid Lama S.J.K. (T) Vivekananda
- Johnson Suisse (Malaysia) Sdn. Bhd.
- Sapura Holdings Sdn. Bhd.
- Datuk A.K. Nathan
- Encik Richard Lim Heng Suan
- Perunding Bakti Sdn. Bhd.
- Siow Cheng Lee Construction Sdn. Bhd.
- Encik Ngim Kai Wing, Central Glass & Aluminium Contractors Sdn. Bhd.
- Encik C.K. Chen
- Teknion Furniture Systems (Malaysia) Sdn. Bhd.
- O'Connor's Engineering Sdn. Bhd.
- Encik Krishnan Tan, IJM
- Encik Deepak J. Tekwani, Carpet Raya Sdn. Bhd.
- Denlite Letrik Sdn. Bhd.
- Perunding Wellcore
- Perunding AC & Rakan Sdn. Bhd.
- Marshall Day Acoustics

Suisse Serenade 2002

BATHROOM LIFESTYLE AT ITS BEST

JohnsonSuisse

Bathroom solutions

For enquiries, please call: • **Klang Valley** 03-7955 2522, 2284 4577 • **Penang** 04-659 2230 • **Ipoh** 05-313 7367 • **Johor Bahru** 07-334 5794



STRUCTURAL & MECHANICAL CONTRACTORS

# EVERSENDAI

*Structural Design, Engineering, Fabrication and Erection for*

- High-Rise Buildings
- Industrial Plants
- Roof Structures
- Bridges
- Power Plants
- Petrochemical Plants





**Our corporate philosophies:**
- High Standards of Quality
- Strict Adherence to Time Schedules
- Attention to Safety
- Total Client Satisfaction


SENDAI EVERSENDAI ENGINEERING GROUP

No. 5, Jalan 5/65C, Pekeliling Business Centre, 53000 Kuala Lumpur, Malaysia
Tel: 60 (03) 4024 5597, 4025 5597 Fax 60 (03) 4024 1468 E-mail: eversendai@eversendai.com.my

Abu Dhabi • Bahrain • Dubai • Hong Kong • India • Malaysia • Philippines • Saudi Arabia • Singapore

Education is the manifestation of the perfection already in man.

Swami Vivekananda



Religion is the manifestation of the Divinity already in man.

Swami Vivekananda